DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE IVth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
UDUMALPET

**Sessions Case No : 126/2016**

Deposition of Witness for : **P.W. 29**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பார்த்திபன் | Calling | : | காவல் உதவி ஆணையர், சிறப்பு நுண்ணறிவு பிரிவு |
| Father Name | : | பழனிசாமி | Taluk | : | கோவை |
| Age | : | 54 | District | : | கோவை |

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of **13.11.2025**

**முதல் விசாரணை –**

நான் தற்போது காவல் உதவி ஆணையராக சிறப்பு நுண்ணறிவு பிரிவில் கோவையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2015 அன்று மடத்துக்குளம் வட்ட ஆய்வாளராக பணியிலிருந்த போது கணியூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அப்சல் அகமது என்பவர் அலுவலில் இருந்த போது திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவு எண். RC No.0410816/2015 Dated 25.03.2015 ன் படி காவல் நிலைய சரகம் கருதி அலங்கியம் காவல் நிலையத்திலிருந்து மாறுதல் செய்து கணியூர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குற்ற எண்.64/2015 ஐ கணியூர் காவல் நிலைய குற்ற எண்.107/2015 இதச 302, 201, @ 120 B, 302, 302 r/w 109 and 201 ஆக உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை நகலை புலன்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். அதை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு, சம்பவ இடம் சென்று பார்வையிட்டும், சாட்சிகளை விசாரிக்க ஏற்கனவே தாராபுரம் காவல் ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தையே என்னிடம் சொன்னதால் நான்

தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கோப்புகள் தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்ததாலும், சம்பவ இடம் கணியூர் காவல் நிலைய எல்கைக்குட்பட்டதாக இருந்ததாலும், வழக்கு விசாரணை கணியூர் காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரிவித்தும், மேற்படி வழக்கு கோப்பை குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றம் உடுமலைபேட்டை எண்.2 க்கு அனுப்ப நான் தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். 22.04.2015 அன்று இறந்துபோன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியன் உடலை உடற்கூராய்வு செய்த தாராபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.யோகலட்சுமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, உடற்கூராய்வு அறிக்கை பெற்றேன். அதே நாளில் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் பேரானந்தம் என்பவர் இறந்து போனவர் உடலின் குரல்வளையத்தை பரிசோதனை செய்துள்ளார் என்று தெரிந்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்றேன். 21.05.2015 அன்று இந்த வழக்கின் சட்டப்பிரிவை இதச 302, 201, @ 120 B, 302, 302 r/w 109 and 201 இருந்து 120 B, 364, 364 r/w 109, 302, 302 r/w 109, 201 ஆக மாறுதல் அறிக்கை தயார் செய்து சட்டப்பிரிவை மாற்றினேன். மேற்படி **மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.42** ஆகும். அதே நாளில் இறந்தவரின் கழுத்து தோலை பரிசோதனை செய்த கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவர் நர்மதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சான்றிதழ் பெற்றேன். பின்பு அதே நாளில் அலங்கியம் காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் விஜயகுமார் மற்றும் அப்சல் அகமது ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே நாளில் வழக்கின் புலன் விசாரணை முடித்து இதச பிரிவுகள் 120 B, 364, 364 r/w 109, 302, 302 r/w 109, 201 ன் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

27.03.2015 அன்று நான் வழக்கு கோப்பை புலன்விசாரணைக்காக பெற்றேன். 21.05.2015 அன்று கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவர் நர்மதா என்பவரை எந்த நேரத்தில் விசாரித்தேன் என்றால் தற்போது அது ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். மேற்படி தேதியில் அலங்கியம் காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் விஜயகுமார் மற்றும் அப்சல் அகமது மற்றும் கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவர் நர்மதா ஆகியோர்களை நான் எந்த வரிசை பிரகாரம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சாட்சி முதலில் மருத்துவரையும், பின்பு உதவி ஆய்வாளர்களையும் விசாரித்தேன் என்று கூறுகிறார். நான் வழக்கு கோப்புகளை பெற்ற பிறகு நான் உடனடியாக அன்றைய தினம் இரவு சம்பவ இடம் சென்று விசாரித்தேன். சம்பவ இடத்தை எனக்கு அன்றைய தினம் யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் சாட்சி வழக்கு சம்பந்தப்பட்ட சாட்சிகள் காட்டினார்கள், அவர்கள் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் சம்பவ இடத்தை பார்க்க செல்லும் போது புகார் கொடுத்த கிராம நிர்வாக அலுவலரை அழைத்து சென்றேனா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். வழக்கு கோப்புகளை பெற்றவுடனே இந்த வழக்கில் புகார்தாரர் கிராம நிர்வாக அலுவலர் என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். புகார்தாரர் கிராம நிர்வாக அலுவலரை நான் சம்பவ இடத்திற்கு சென்ற தேதியன்று விசாரிக்கவில்லை, பின்னிட்டு விசாரித்தேன். தற்போது நான் விசாரித்த தேதியை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் புலன் விசாரணையின் போது பாலாஜி என்ற பாலசுப்பிரமணியன் வீட்டிற்கு சென்றேனா என்றால் சென்றேன். மேற்படி இறந்துபோனவருக்கு சொந்த ஊர் குறிச்சிகோட்டை கிராமம். மேற்படி இறந்துபோனவர் இறந்த சமயத்தில் தோட்டத்துசாளையில் வசித்து வந்தார். முநதைய புலன்விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகள் தவிர நான் கூடுதலாக இறந்துபோனவர் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள எந்த

சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு கோப்புகளை பெறுவதற்கு முன்பாகவே இந்த வழக்கின் எதிரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். முந்தைய ஆய்வாளர் விசாரணை செய்து வைத்திருந்த சாட்சிகளை விசாரித்து நான் கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 3வது எதிரியிடமிருந்து ஒரு மொபைல் கைபற்றப்பட்டதாக இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளது, மேற்படி மொபைல் 3வது எதிரி பெயரில் தான் வாங்கப்பட்டது என்பது சம்பந்தமாக நான் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கைபற்றப்பட்டதாக சொல்லப்படும் மொபைலில் சிம் கார்டு இல்லை என்றால் சரிதான். மேற்படி மொபைலை 3வது எதிரி தான் பயன்படுத்தி வந்தார் என்பதை காட்டுவதற்கு சாட்சிகளை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல, ஏற்கனவே முந்தைய ஆய்வாளர் விசாரணை செய்து பதிவு செய்துள்ளார். 3வது எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் அலைபேசி எண் சம்பந்தமாக மேற்படி நோடல் அலுவலரை விசாரித்து முந்தைய ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கைபற்றப்பட்டதாக சொல்லப்படும் மேற்படி மொபைலுக்கு IMEI எண் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எண் என்ன என்பதை விசாரித்து இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அலைபேசி எண்கள் யார் யார் பெயரில் உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி எந்தெந்த எதிரிகள் எந்த அலைபேசி எண்ணை பயன்படுத்தினார்கள் என்பதை விசாரித்து இந்த வழக்கு கோப்பில் குறிப்பிட்டுள்ளோம், ஆனால் அந்த அலைபேசி எண்கள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்பது சம்பந்தமாக நான் விசாரிக்கவில்லை. எந்தெந்த எதிரிகள் எந்தெந்த அலைபேசி எண்களை பயன்படுத்தி வந்தார்கள் எந்த சாட்சியும் நான் விசாரித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை, நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைபற்றயதாக சொல்லப்படும் IMEI எண்

உள்ள மொபைல்கள் எந்தெந்த நேரத்தில் எந்த இடத்தில் பயன்படுத்தப்பட்டது சம்பந்தமாக தொழில்நுட்பமாக நான் சான்றிதழ் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3வது எதிரியிடமிருந்து எந்த இடத்திலிருந்து மொபைல் கைபற்றப்பட்டது என்றால் சாட்சி நல்லாம்பள்ளி கிராமம், 3வது எதிரியின் தந்தை கருப்புசாமி வீட்டில் வைத்து கைபற்றப்பட்டது. மேற்படி மொபைலை கைபற்றும் போது உடனிருந்த உதவி ஆய்வாளர் சிவசங்கரியை நான் விசாரித்தேன். 3வது எதிரியிடமிருந்து மொபைலை கைபற்றும் போது உதவி ஆய்வாளர் சிவசங்கரி தாராபுரத்திலிருந்து, குறிச்சிகோட்டை சென்றுவிட்டு, பின்பு நல்லாம்பள்ளி சென்று கைபற்றினாரா அல்லது நேரடியாக தாராபுரத்திலிருந்து நல்லாம் பள்ளி சென்று கைபற்றினாரா என்று மேற்படி சிவசங்கரி என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை தவிர வேறு எந்த சாட்சியையும் விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும், நான் உண்மையிலேயே சென்றிருந்தால் நான் கிராமநிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்து சென்றிருப்பேன் என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு விசாரணைக்காக நல்லாம்பள்ளிக்கோ, குறிச்சிக்கோட்டைக்கோ நான் செல்லவே இல்லை என்றால் சரியல்ல. கூடுதல் சாட்சிகளை நான் விசாரிக்காமல் நான் தவறாக சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

இந்த வழக்கில் அ.சா.7 மகேஷ்வரனை நான் நேரடியாக பார்த்து விசாரித்தேன். அவரை விசாரித்து நான் கூடுதலாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அ.சா.6 குணசேகரன் என்பவரை நான் விசாரித்த போது ARP வாய்க்காலில் சம்பவ சமயத்தில் தண்ணீர் போய் கொண்டிருந்தது என்று என்னிடம் சொன்னாரா என்றால் ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். அ.சா.8

வெங்கடாச்சலம் என்பவரை நான் வழக்கு கோப்பை பெற்று எத்தனை நாள் கழித்து விசாரித்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் உள்ள மகஜர் சாட்சிகளை நான் விசாரித்தேன். 1 மற்றும் 2 எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சரியாக விசாரணை செய்து கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.13 15:07:56 +0530

IV[th] Additional District and Sessions Judge,
Udumalpet.